# 2

# தேசிய வெளியீடு மற்றும் செலவினம்

*இலங்கைப் பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள் ஆகிய இரண்டிலுமிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியில் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அலுவல்சார் புள்ளிவிபரங்களின்படி, பொருளாதாரம் 2018இன் முதலரைப்பகுதியில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சி பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தமையின் மூலம் பணிகள் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக விரிவடைவதற்கு பக்கத்துணையாக காணப்பட்ட வேளையில் கைத்தொழில் நடவடிக்கைகள் மெதுவடைந்து பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தடையாகக் காணப்பட்டன. நிதியியல் பணிகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு முக்கியமாக ஆதரவளித்த வேளையில் நெல், காய்கறிகள், தானியங்கள் மற்றும் பழவர்க்கங்களில் ஏற்பட்ட மீட்சி வேளாண்மை நடவடிக்கைகள் மேல் நோக்கித் திரும்பியமைக்கு முக்கியமாகப் பங்களித்தன. எனினும், கட்டடவாக்க நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட பின்னடைவு பிரதானமாக கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சியை குறைவடையச் செய்தன. முன்னைய ஆண்டுப்பகுதியில் நிலவிய இறுக்கமான நாணயக் கொள்கை நிலையின் காலங்கடந்த தாக்கம், அரசின் இறைத்திரட்சி திடமாக்கும் செயன்முறைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் நிச்சயமற்ற கொள்கை என்பன இவ்வாண்டுப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை தளர்வுறச் செய்தன. முன்னோக்கிப் பார்க்கையில், முன்னணிப் பொருளாதாரங்களுடனான இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக ஒழுங்குகள், வியாபாரம் நடாத்துதலில் இலகுபடுத்தலை மேம்படுத்துவதற்கான முயற்சிகள், அதிக கவனமுள்ள முதலீட்டு ஊக்குவிப்புக்களின் அபிவிருத்தி, வர்த்தக வசதிப்படுத்தல்கள், காரணிச் சந்தையிலான மீள்சீர்த்திருத்தங்கள் மற்றும் கொள்கைப் பக்கத்தில் காணப்பட்ட ஏனைய சாதகமான அபிவிருத்திகள் என்பவற்றிலிருந்து பொருளாதாரம் நன்மைகளைப் பெற்றிருக்கும். எனினும், உலகளாவிய பண்ட விலைகளில், குறிப்பாக மசகெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட உயர்வு பிரதான வர்த்தகப் பங்காளர் பொருளாதாரங்களில் காணப்படும் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டு அதிர்வுகள், இறை வழிமுறைகளின் சுருக்கம் மற்றும் எதிர்பாராத மோசமான வானிலை நிலைமைகள் என்பன எறிவு செய்யப்பட்ட வளர்ச்சித் தோற்றப்பாட்டிற்கான கீழ் நோக்கிய இடர்நேர்வுகளாக காணப்படுகின்றன.*

## 2018இல் அபிவிருத்திகள்


### வெளியீடு

- **2018இன் முதலரைப்பகுதியில் பொருளாதாரம் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 3.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** பணிகள் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகள் முறையே 4.8 சதவீதத்தினாலும் 4.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்த வேளையில், கைத்தொழில் நடவடிக்கைகள் தொடர்பில் 1.6 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டது. பணிகள் துறையில் ஏற்பட்ட விரிவாக்கமானது முக்கியமாக நிதியியல் பணிகள், வர்த்தகம், ஏனைய தனியாள் பணிகள் மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினால் தூண்டப்பட்டது. அதேநேரம், நெல், காய்கறிகள் மற்றும் தானியங்கள் என்பனவற்றில் ஏற்பட்ட மீட்சி பழவர்க்கங்கள், விலங்கு உற்பத்திகள், மீன்பிடி, வாசனைத்திரவியங்கள் மற்றும் காடாக்கல் மற்றும் மரங்களைக் குற்றியாக்குதல் ஆகியவற்றிலிருந்தான சாதகமான பங்களிப்புக்களுடன் சேர்ந்து வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சியைத் தூண்டியது. எனினும், தயாரிப்பு நடவடிக்கைளில் விரிவாக்கம் காணப்பட்டமைக்கிடையிலும் கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் காணப்பட்ட பின்னடைவு, கைத்தொழில் வளர்ச்சியின் வேகத்தினைக் குறைப்பதாகக் காணப்பட்டது.

- **இலங்கை மத்திய வங்கியின் நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பின்படி பொருளாதாரமானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.0 சதவீதத்தினால் வளர்ச்சியை அடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.** இவ்வெறிவு செய்யப்பட்ட ஆண்டு வளர்ச்சிக்கு பணிகள் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகள் முக்கியமாக ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஓரளவு மிதமான தன்மை எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல் பணிகள் மற்றும் மொத்த விற்பனை சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவாக்கமானது சுற்றுலா நடவடிக்கைகளில் ஏற்பட்ட மேல் நோக்கிய உயர்வினால் ஆதரவளிக்கப்பட்ட தங்குமிட பணிகளின் அபிவிருத்திகளுடன் சேர்ந்து பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு தூண்டுதலளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், வேளாண்மை

வரைபடம் 2.2

காலாண்டு மொ.உ.உ. வளர்ச்சி வீதங்கள் (அ)




(அ) தரவுகள் 2010 அடிப்படை ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.1

மொத்த உள்நாட்டு உற்பத்தி - 2018 முதலரையாண்டு




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நடவடிக்கைகளில் காணப்படும் மீட்சி ஆண்டின் எஞ்சிய பகுதிகளிலும் தொடர்ந்தும் காணப்பட்டு ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான முறையில் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கைகளில் எறிவுசெய்யப்பட்ட மிதமான தன்மைக்கு சிமெந்தின் கிடைப்பனவு மற்றும் கட்டவாக்க மூலப்பொருள் இறக்குமதி போன்ற குறிகாட்டிகளினால் பிரதிபலிக்கப்பட்டவாறு அண்மையில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட மெதுவான போக்கே பெருமளவிற்குக் காரணமாகும். எனினும், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்பில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் வேளாண்மையின் சாதகமான கசியும் தாக்கத்தின் மீட்சி, கைத்தொழில் நடவடிக்கைகளின் செயலாற்றத்திற்கு தயாரிப்பு நடவடிக்கைகள் சாதகமாகப் பங்களித்திருக்கிறது. வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டினால் எடுத்துக்காட்டப்பட்ட எதிர்பார்க்கையின்படி, பொருளாதாரத்தின் ஒட்டுமொத்தக் கேள்வி மற்றும் உற்பத்தி என்பன ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியின் தொடக்கத்திலிருந்து மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், செத்தெம்பர் மாதத்திற்கான பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் காணப்பட்ட நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு அடுத்த மூன்று மாதங்களுக்கு மேம்பாடொன்றினை எடுத்துக்காட்டுகிறது. மேலும், தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான செத்தெம்பர் மாதத்திற்குரிய கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணும் அண்மைய எதிர்காலத்தில் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் மேம்பாடொன்றினை எதிர்பார்க்கிறது. எனினும், அளவீட்டுப் பங்கேற்பாளர்கள் நிச்சயமற்ற கொள்கைகள் மற்றும் தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமைகள் என்பன அவர்களது வியாபாரத் தீர்மானங்களை மேற்கொள்வதன் மீது மோசமான தாக்கமொன்றினைக் கொண்டிருக்குமென எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

- **2018இற்கான வளர்ச்சி எறிவுகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள் இரண்டிலுமிருந்து தோன்றுகின்ற சில கீழ் நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன.** உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் காணப்படும் உயர்வடைந்து செல்லும் போக்கு உள்நாட்டு வலுச் செலவினை அதிகரித்து அதன் மூலம் தயாரிப்பு, கட்டடவாக்கம் மற்றும் போக்குவரத்து போன்ற உள்நாட்டுக் கைத்தொழில்களின் உள்ளீட்டுச் செலவினை அதிகரிக்கிறது. மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பாக ஈரான் மற்றும் ஏனைய முக்கிய வர்த்தகப் பங்காளர் பொருளாதாரங்களில் காணப்படும் புவிசார் அரசியல் பதட்டங்கள் நாட்டின் ஏற்றுமதியின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய பிரதேசத்தில் காணப்படும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைமைகள் வெளிநாட்டுக் கேள்வியின் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அதேவேளை, ஏதேனும் எதிர்பார்க்கப்படாத மோசமான வானிலை நிலைமைகள் முக்கிய வேளாண்மைப் பயிர்களின் மீட்சியின் மீது மோசமான தாக்கமொன்றினை ஏற்படுத்தி வேளாண்மை நடவடிக்கைளின் வளர்ச்சிக்குத் தடையாக விளங்கக்கூடுமென்பதுடன் இதன் தாக்கம் உணவு பதனிடல் தொடர்பான தயாரிப்பு நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து போன்ற ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுக்கு படிப்படியாகக் கசிந்து செல்லக்கூடும்.

## பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி

### வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி

- **2018இன் முதலரைப்பகுதியில் வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவிற்கு மீட்சியடைந்து 2017இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கெதிராக பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** இம்மேல்நோக்கிய திருப்பத்திற்கு பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை, விலங்கு உற்பத்திகள், மீன்பிடி, வாசனைப் பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் காடாக்கல் மற்றும் குற்றியாக்குதல் என்பனவற்றிலிருந்தான சாதகமான பங்களிப்புக்களுடன் சேர்ந்து, பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் முறையே 58.2 சதவீதம், 14.8 சதவீதம் மற்றும் 38.1 சதவீதம் என்பனவற்றினால் வளர்ச்சியடைந்த அரிசி, காய்கறிகள் மற்றும் தானியங்களின் பயிர்ச்செய்கையில் காணப்பட்ட கணிசமான மீட்சியின் மூலம் பெருமளவிற்கு ஆதரவளித்தன. எனினும், இக்காலப்பகுதியில் எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை (தெங்கு, செவ்விளநீர், எண்ணெய்த் தாவரம்) பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 4.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு முன்னைய ஆண்டுப்பகுதியில் நிலவிய வரட்சி நிலைமைகளின் தாமித்த தாக்கமே காரணமாகும். மேலும், இறப்பர், ஏனைய நீண்ட காலப் பயிர்களின் பயிர்ச்செய்கை, கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாப் பயிர்களின் பயிர்ச்செய்கையும் இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் சுருக்கமடைந்து வேளாண்மை நடவடிக்கைகளின் மீட்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்கு தடைகளை ஏற்படுத்தின.

## உற்பத்திகளின் போக்குகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு: வேளாண்மை

### வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

- **வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் உற்பத்தியை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் 2018இன் முதலரைப்பகுதியில் 13.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** சாதகமான வானிலை நிலைமை மற்றும் அதிகரித்த பயிர்ச்செய்கை நிலப்பரப்பு என்பனவற்றிலிருந்தான முக்கிய பயன் காரணமாக நெல் துணைச் சுட்டெண் 62.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. விலங்கு வளர்ப்பு மற்றும் ஏனைய பயிர்களின் (பழவர்க்கங்கள், காய்கறிகள் மற்றும் ஏனைய களப் பயிர்கள்) துணைச் சுட்டெண்களும் ஒட்டுமொத்த சுட்டெண்ணிற்கு சாதகமான முறையில் பங்களித்து முறையே 9.4 சதவீதம் மற்றும் 18.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், இறப்பர் துணைச் சுட்டெண் 12.8 சதவீதம் கொண்ட முனைப்பான வீழ்ச்சியொன்றைக் காட்டியமைக்கு, குறிப்பாக, இக்காலப்பகுதியில் நிலவிய தாழ்ந்த சந்தை விலைகள், முதலரைப்பகுதியின் இறுதிப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள் என்பனவற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் பாலெடுக்கும் தொழிற்பாடுகள் குறைவடைந்தமையே காரணமாகும். 2018இன் முதலரைப்பகுதியில் தெங்கு துணைச் சுட்டெண் 5.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் தேயிலைச் துணைச் சுட்டெண் 1.3 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

அட்டவணை 2.1

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010=100)

| விடயம் | 2017 முதலரை (அ) | 2018 முதலரை (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2016/17 (அ) | 2017/18 (ஆ) |
|---|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் மீன்பிடி** | **118.1** | **133.8** | **-11.7** | **13.3** |
| **1 வேளாண்மை** | **111.2** | **130.0** | **-15.6** | **16.9** |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 103.7 | 122.9 | -19.6 | 18.5 |
| நெல் | 78.8 | 128.2 | -49.2 | 62.6 |
| தேயிலை | 99.8 | 101.1 | 0.8 | 1.3 |
| இறப்பர் | 67.2 | 58.6 | -5.9 | -12.8 |
| தெங்கு | 91.0 | 86.2 | -13.2 | -5.3 |
| ஏனைய பயிர்கள் | 137.8 | 163.8 | -9.6 | 18.9 |
| மரக்கறி | 130.6 | 170.4 | -17.3 | 30.5 |
| பழவகைகள | 164.0 | 176.3 | 12.5 | 7.5 |
| ஏனைய பயிர்கள் | 136.5 | 176.2 | -18.6 | 29.1 |
| 1.2 விலங்கு வளர்ப்பு | 170.5 | 186.5 | 11.3 | 9.4 |
| **2 மீன்பிடி** | **151.6** | **152.5** | **5.7** | **0.6** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


மூலம்: இலங்கை மத்திய வங்கி

மேலும், 2018இன் முதலரைப்பகுதியில் மீன்பிடித் துணைச் சுட்டெண்ணும் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் மோசமான வானிலை நிலைமைகள் காணப்பட்டமைக்கிடையிலும் 0.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

### நெல்

- **நெல் உற்பத்தி 2017இல் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளிலிருந்து மீட்சியுற்று 2018இல் ஏறத்தாழ 60 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்ததாக மதிப்பிடப்பட்டிருப்பதுடன் இது அரிசிக்கான முழு உள்நாட்டுக் கேள்வியையும் ஈடுசெய்ய போதுமானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2017/2018 பெரும்போக பருவ காலத்திலும் 2018 சிறுபோக பருவகாலத்திலும் நிலவிய தூண்டுதலளிக்கும் வானிலை நிலைமைகள் இவ்வாண்டுப்பகுதியில் 3.8 மில்லியன் மெ.தொன் கொண்ட உற்பத்திக்கு உதவியளித்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி 2017/2018 பெரும்போக நெல் உற்பத்தி வரட்சி நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட முன்னைய பெரும்போக பருவ காலத்தினைவிட, ஏறத்தாழ 62.6 சதவீதத்தினால் 2.4 மில்லியன் மெ.தொன்களுக்கு அதிகரித்திருக்கிறது. அதேவேளை, சேமிக்கப்பட்ட நீரின் மூலமாக முக்கியமாக நீர்ப்பாசனத்தைப் பெற்றதன் மூலம் 2018 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 1.4 மில்லியன் மெ.தொன்களாக இருக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. இது, முன்னைய சிறுபோக காலத்துடன் ஒப்பிடுகையில் 56.8 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. கிடைக்கத்தக்கதாகவுள்ள நெல்லின் இருப்பிலிருந்து ஏறத்தாழ 2.4 மில்லின் மெ.தொன் கொண்ட அரிசி குற்றப்படுமென எறிவுசெய்யப்பட்டிருக்கின்ற அதேவேளை இது உள்நாட்டுக் கேள்வியின் ஏறத்தாழ 12 மாதங்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாகவிருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் 2017இல் காணப்பட்ட தாழ்ந்த அறுவடை மற்றும் குறைவடைந்து சென்ற இருப்புக்கள் என்பன உள்நாட்டு விலைகளை அதிகரித்து அரிசி இறக்குமதியினை ஊக்குவிக்கின்ற முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த நிலையொன்றினை அரசாங்கம் எடுப்பதற்கு தூண்டியிருந்தது. 2018இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 100.1 மில்லியன் மொத்தச் செலவில் 239,519 மெ.தொன்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. அதிகரித்த இவ்வுற்பத்திகளுக்கு மத்தியிலும் தெரிவுசெய்யப்பட்ட

வரைபடம் 2.3
நெல் உற்பத்தி




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நெல் மற்றும் அரிசிகளின் விலைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டன. 2018இன் முதலரைப்பகுதியில் அரிசியின் சராசரி திறந்த சந்தை விலை 2017ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.51.35 இற்கு 6.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் நாட்டு அரிசிக்கான சராசரி நெல்லின் விலை கி.கிராமிற்கு ரூ.40.05 ஆக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 17.1 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். அதேவேளை, 2018இன் முதலரைப்பகுதியில் சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலை கி.கிராமொன்றிற்கு ரூ.107.36 ஆகக் காணப்பட்டதுடன் இது 2017இன் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 12.8 சதவீதம் கொண்டதொரு சிறிதளவு அதிகரிப்பாகும். நாட்டு அரிசியின் சராசரி சில்லறை விலை கி.கிராமொன்றிறக்கு ரூ.93.26 ஆக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

- **2016இன் சிறுபோக பருவகாலத்திலிருந்து நடைமுறையிலிருந்த வளமாக்கிக் காசுக் கொடை நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பதிலாக 2018 சிறுபோக பருவகாலத்திலிருந்து வளமாக்கி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தை மீள அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசாங்கம் எடுத்திருந்தது**. நெற்பயிர்ச் செய்கைகக்காக 50 கி.கிராம் கொண்ட தொகை வடிவிலான வளமாக்கியை ரூ.500 கொண்ட விலைக்கும் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய பயிர்களுக்கான தொகை வடிவிலான 50 கி.கிராம் கொண்ட வளமாக்கியை ரூ.1,500 கொண்ட விலைக்கும் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. வளமாக்கி உதவுதொகைகள் வேளாண்மைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றதுடன் இது வேளாண்மை காலநிலை வலயங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பனவற்றின் அடிப்படையில் விதந்துரைக்கப்படுகிறது. அரசாங்கம் சந்தையில் பற்றாக்குறையினைத் தவிர்க்கும் ஒரு வழிமுறையாக 2018 ஏப்பிறல் பண்டிகை காலத்தின் போது அரிசியைத் தொடர்ந்தும் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனினும், 2018 முதலரைப்பகுதியில் அரிசியின் இறக்குமதி 2017இன் தொடர்பான காலப்பகுதியின் இறக்குமதிகளைவிட 29.1 சதவீதம் குறைவானதாக விளங்கியமைக்கு போதுமான நெல் இருப்பு குற்றப்படுவதற்காக சந்தையில் கிடைக்கத்தக்கதாக இருந்தமையே காரணமாகும்.


### தேயிலை

- **2018இன் முதலரைப்பகுதியில் மொத்தத் தேயிலை உற்பத்தி 158.2 மில்லியன் கி.கிராம்களாக விளங்கி 2017இன் இதே காலப்பகுதியின் உற்பத்தியை விட 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** மே மற்றும் யூன் மாதங்களில் தேயிலை வளரும் பெருந்தோட்ட மாவட்டங்களில் நிலவிய மழை வானிலை நிலைமைகள் தேயிலை உற்பத்தி மீது எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருந்ததுடன் இது ஆய்விற்குரிய காலப்பகுதியில் வளர்ச்சி உத்வேகத்திற்கு தடங்கலாகக் காணப்பட்டது. இதன்படி, அனைத்து உயர வகைப் பிரதேசங்களும் வெளியீட்டில் மிதமான விரிவாக்கத்தைக் காட்டியதுடன் தாழ்ந்த பிரதேச தேயிலை உற்பத்தி முக்கிய பங்களிப்பாளராக விளங்கி 2018இன் முதலரைப்பகுதியில் 97.7 மில்லியன் கி.கிராம்களுக்கு 1.0 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, இக்காலப்பகுதியில் உயர் மற்றும் மத்திய உயரத் தேயிலை உற்பத்திகள் இரண்டும் முறையே 24.4 மில்லியன் கி.கிராம்களுக்கும் 36.1 மில்லியன் கி.கிராம்களுக்கும் 0.7 சதவீதத்தினால் அதிகரித்தன. 2018இன் முதலரைப்பகுதியில் மொத்தத் தேயிலை உற்பத்திக்கான தேயிலை உடமையாளர்களின் பங்களிப்பு 2017இன் முதலரைப்பகுதியின் 73.8 சதவீதத்திலிருந்து 73.9 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

- **கொழும்புத் தேயிலை ஏலங்களின் விலைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கி.கிராமொன்றிற்கு ரூ.605.17 இற்கு**

2

வரைபடம் 2.4
தேயிலை உற்பத்தி




*மூலம்:* இலங்கைத் தேயிலைச் சபை

**2.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்திருந்தன.** இக்காலப்பகுதியில் உயர்ந்த வீழ்ச்சி மத்திய நிலத் தேயிலையிலும் (5.5 சதவீதம்) அதனைத் தொடர்ந்து உயர் நிலத் தேயிலையிலும் (2.9 சதவீதம்) தாழ்நிலத் தேயிலையிலும் (1.7 சதவீதம்) பதிவுசெய்யப்பட்டன. மேலும், 2018 யூலை மாதத்திற்கான கொழும்புத் தேயிலை ஏலங்களின் சராசரி விலை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் கி.கிறாமொன்றிற்கு ரூ.535.80 இற்கு 9.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2018இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ரூ.795.42 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.827.99 இற்கு 4.1 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018இன் முதலரைப்பகுதியில் கொழும்புத் தேயிலை ஏலங்களில் முன்வைக்கப்பட்ட தேயிலையின் அளவும் 3.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2017இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வருவாய்கள் 0.1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.

## இறப்பர்

- **ஈர வலயத்திலுள்ள இறப்பர் வளர்ப்பு பிரதேசங்களில் காணப்பட்ட தொடர்ச்சியான மழை இறப்பர் பெருந்தோட்டங்களின் பாலெடுக்கும் நாட்களின் இழப்பிற்குக் காரணமாகி இறப்பர் விளைச்சலில் குறிப்பிடத்தக்க குறைப்பினைத் தோற்றுவித்தது.** 2018இன் முதலரைப்பகுதியில் இறப்பர் உற்பத்தி 2017இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 39.3 மில்லியன் கி.கிறாம்களுக்கு 12.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டியது. மொத்த இறப்பர் உற்பத்தியில் மிகப் பெரும் கூறாக விளங்கும் தட்டை இறப்பர் உற்பத்தி 19.6 மில்லியன் கி.கிறாம்களுக்கு 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் கிறேப் இறப்பர் உற்பத்தி 6.9 மில்லியன் கி.கிறாம்களுக்கு 0.5 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. அதேவேளை, 2018இன் முதலரைப்பகுதியில் செறிவூட்டப்பட்ட லேட்டக்ஸ் இறப்பரின் உற்பத்தியும் மற்றைய இறப்பர் வகைகளின் உற்பத்தியும் 12.8 மில்லியன் கி.கிறாம்களுக்கு 18.7 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. 2018இன் முதலரைப்பகுதியில் இறப்பரின் சராசரி விலைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியிலும் பார்க்கக் குறைந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டன. 2018இன் முதலரைப்பகுதியில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் சராசரி விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.289.78 ஆக விளங்கி 12.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை கொழும்பு இறப்பர் ஏலங்களில் லேட்டக்ஸ் இறப்பரின் சராசரி விலை கி.கிறாமொன்றிறக்கு ரூ.325.93 இற்கு 4.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைக் எடுத்துக்காட்டியது.

## தெங்கு

- **தெங்கு உற்பத்தி 2017இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் 5.3 சதவீதத்தினால் 1,220.2 மில்லியன் காய்களுக்கு வீழ்ச்சியடைந்திருக்குமென மதிப்பிடப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு, 2016இன் பிற்பகுதியிலும் 2017இன் தொடக்கப் பகுதியிலும் நிலவிய வரட்சி நிலைமைகளின் காலங்கடந்த தாக்கமே காரணமாக அமைந்தது.** எனவே தெங்கினை அடிப்படையாகக்கொண்ட பல்வேறுபட்ட தெங்கு உற்பத்தி பொருட்களின் அளவானது ஆய்விற்குறிய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தது. தேங்காய் எண்ணெய் உற்பத்தி 2,851 மெ.தொன்களுக்கு 70.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தேங்காய் துருவல் உற்பத்தி 8,461 மெ.தொன்களுக்கு 48.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வேர்ஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் 5,785 மெ.தொன்களுக்கு 16.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. காய்களின் உற்பத்தியில் குறைப்பு காணப்பட்டமைக்கிடையிலும் 2018இன் முதலரைப்பகுதியில் தேங்காய்க் கழிம்பு, தேங்காய்ப் பால்மா, தேங்காய் பால் உற்பத்திகள் 51.4 சதவீதத்தினால் 32,909 மெ.தொன்களுக்கு அதிகரித்தது. வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறை 2018இல் சந்தையில் தேங்காயின் விலைகளை கடுமையாக அதிகரிக்கச் செய்தது. சராசரி மொத்த விற்பனை விலை 2017இன்

முதலரைப்பகுதியில் காயொன்றிற்கு ரூ.55.80 இலிருந்து 2018இன் இதே காலப்பகுதியில் காயொன்றிற்கு ரூ.71.58 இற்கு 28.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேபோன்று சராசரிச் சில்லறை விலைகள் 2017இல் காயொன்றிற்கு ரூ.61.71 இலிருந்து 2018இல் காயொன்றிற்கு ரூ.77.61 இற்கு 25.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 2017 திசெம்பரில் காணப்பட்ட விலைகளுடன் ஒப்பிடுகையில் தேங்காயின் சராசரி சில்லறை விலைகள் 2018 யூனில் காயொன்றிற்கு ரூ.83.42 இலிருந்து காயொன்றிற்கு ரூ.76.83 இற்கு 7.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2018இன் முதலரைப்பகுதியில் மூன்று முக்கிய உள்ளீட்டு உற்பத்திகளினதும் சராசரி ஏற்றுமதி விலைகள் 2017இன் முதலரைப்பகுதியில் அறிவிக்கப்பட்ட காயொன்றிற்கான ரூ.53.15 இலிருந்து காயொன்றிற்கு ரூ.79.47 இற்கு 49.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

### ஏனைய களப் பயிர்கள்

- **2017/18 பெரும்போக பருவகாலத்தில் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி மீட்சியடைந்து 42.3 சதவீதத்தினால் ரூ.429,289 மெ.தொன்களுக்கு அதிகரித்தமைக்கு சாதமான வானிலை நிலைமைகளே முக்கியமான ஆதரவாக விளங்கின.** இப்பருவ காலத்தில் பெரிய வெங்காயம், தட்டைப் பயறு, பச்சைப் பயறு, குரக்கன் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களின் உற்பத்தி அதிகரித்தது. இதற்கு உருளைக்கிழங்கு போன்ற தெரிவுசெய்யப்பட்ட பண்டங்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட உயர்மட்ட சிறப்புப் பண்டத் தீர்வைகளின் காரணமாக உருளைக்கிழங்கு போன்ற பண்டங்களுக்கு வருமானம் அளிக்கத்தக்க விலைகள் அடையப்பட்டமை ஓரளவு உதவியாக அமைந்தது. அதேவேளை, 2018இன் முதலரைப்பகுதியில் சோளத்தின் உற்பத்தி 242,935 மெ.தொன்களுக்கு 48.4 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இது நாட்டின் மதிப்பிடப்பட்ட சோளத்தின் வருடாந்தத் தேவையில் 50 சதவீதத்திற்கும் கூடுதலானதாகும். மேலும், உழுந்து மற்றும் தட்டைப் பயறின் உற்பத்தி இவ்வாண்டிற்கான மொத்த உள்நாட்டுத் தேவையில் ஏறத்தாழ 80 சதவீதத்தினை ஈடுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், சோயா அவரை, இறுங்கு போன்ற குறிப்பிட்ட ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சிப்போக்கொன்று அவதானிக்கப்பட்டமைக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு குறைவாகக் காணப்பட்டமையே ஓரளவு காரணமாகும்.

### காய்கறிகள்

- **தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, 2017/2018 பெரும்போக பருவ காலத்தில் ஒட்டுமொத்த காய்கறி உற்பத்திகள் 985,982 மெ.தொன்களுக்கு 20.6 சதவீதத்தினால் அதிகரித்தன.** தாழ்நிலக் காய்கறிகளின் உற்பத்தி 31.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மலைநாட்டுக் காய்கறிகளின் உற்பத்தி 20.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஆண்டின் தொடக்கப்பகுதியில் முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் விளைவாக பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். எனினும், மே மாதத்தின் நடுப்பகுதியில் காணப்பட்ட பருவக்காற்றிற்கு முன்னரான பாரிய மழைவீழ்ச்சியானது புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பாரிய வெள்ளத்திற்குக் காரணமாகி 2018 சிறுபோகக் காலத்தில் காய்கறிச் செய்கைகளுக்கு அவற்றின் நாற்றுமேடை கட்டத்திலேயே பெரும் சேதங்களை விளைவித்தது. மேலும், மே மாதம் முழுவதும் தீவு முழுவதிலும் காணப்பட்ட கடுமையான மழைவீழ்ச்சி மலைநாடு மற்றும் தாழ்நிலப் பிரதேசங்கள் இரண்டிலும் பயிர்ச்செய்கையின் ஆரம்பக் கட்டங்களிலேயே காய்கறிகளுக்கு கணிசமானளவிற்கு அதிகரித்த இழப்புக்களை ஏற்படுத்தி குறைந்த உற்பத்தி நிலைமைகளுக்கு வழிவகுத்ததன் மூலம் காய்கறிகளின் விலைகள் 2018 மே இறுதியிலிருந்து அதிகரிக்கத் தொடங்கின. எனினும், 2018 சிறுபோக பருவகாலத்தின் அறுவடை யூலை நடுப்பகுதியில் சந்தைக்குக் கிடைத்தமையானது அதன் பின்னர் காய்கறிகளின் விலைகள் குறைவடைய உதவியாக அமைந்தது.

### சீனி

- **2018இன் முதலரைப்பகுதியில் சீனி உற்பத்தி 22,858.8 மெ.தொன்களுக்கு 56.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** இது, செவனகல தொழிற்சாலைப் பிரதேசங்களில் நிலவிய தூண்டுதலளிக்கும் வானிலை நிலைமைகளின் காரணமாக உற்பத்தியில் ஏற்பட்ட 299.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பு மற்றும் கரும்பு பிழியும் பருவகாலம் தாமதமடைந்தமையின் காரணமாக கல்லோயா மற்றும் பெல்வத்தைத் தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையே 59.8 சதவீதத்தினாலும் 11.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். எனினும், உயர்வடைந்துவரும் கரும்பு உற்பத்தியை கருத்திற்கொண்டு அரசாங்கம் கரும்புப் பயிர்ச்செய்கையை அதிகரிப்பதற்காக கரும்பு ஆராய்ச்சி

2

நிறுவனத்துடன் சேர்ந்து பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அரசாங்கத்தின் பல்வேறுபட்ட முயற்சிகளின் காரணமாக மொத்தக் கரும்பு உற்பத்தி 2018இல் 50,802 மெ.தொன்களுக்கு ஏறத்தாழ 1 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரிக்கக்கூடும். இது நாட்டின் மொத்தச் சீனித் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 9 சதவீதத்திற்கு சமமானதாக இருக்கும்.

### மீன்பிடி

- **மீன்பிடி மற்றும் நீரியல் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சின் மதிப்பீடுகளின்படி கடல் மற்றும் நன்னீர் துறைகளை உள்ளடக்கிய மொத்த மீன் உற்பத்தி 2018இன் முதலரைப்பகுதியில் 254,395 மெ.தொன்களுக்கு 0.6 சதவீதத்தினால் சிறிதளவில் முன்னேற்றம் கண்டது.** மொத்தக் கடல் மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 46 சதவீதத்திற்கு வகைகூறும் கரைகடந்த மற்றும் ஆழ்கடல் மீன்பிடித் துணைத் துறைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 101,180 மெ.தொன்களுக்கு 1.8 சதவீதம் கொண்ட மேம்பாட்டைக் காட்டியது. அதேவேளை, கரையோர துணைத் துறை 119,360 மெ.தொன்களுக்கு 7.1 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு 2018 மே காலப்பகுதியில் கரையோரப் பிரதேசங்களில் நிலவிய மழை வானிலையே முக்கிய காரணமாகும். மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 13 சதவீதத்திற்கு வகைகூறும் நன்னீர் மீன்பிடி மற்றும் வளர்ப்பு மீன் துணைத் துறைகளின் உற்பத்தி 2017இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் 35.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இத்துணைத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு நன்னீர் நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டமையில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதேபோன்று மீன் வளர்ப்புத் துறையில் ஏற்பட்ட மேம்பாடுகளும் காரணங்களாக அமைந்தன. எனினும், சில்லறை விலைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன.

### விலங்கு வளர்ப்பு

- **2018இன் முதலரைப்பகுதியில் விலங்கு வளர்ப்புத் துறை 2017இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியொன்றைக் காட்டியது.** விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களத்தின் மதிப்பீடுகள் மற்றும் எறிவுகளின்படி மொத்தத் தேசிய பால் உற்பத்தி 2018இன் முதலரைப்பகுதியில் 241.2 மில்லியன் லீற்றர்களுக்கு 8.5 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இது மொத்த உள்நாட்டுக் கேள்வியில் ஏறத்தாழ 40 சதவீதத்தினைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருந்தது. 2018இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மொத்த பால் உற்பத்தியில் பசுப்பால் உற்பத்தி 84.4 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் எஞ்சியதற்கு எருமைப்பால் உற்பத்தி வகைகூறியது. அதேவேளையில் 2018இன் முதலரைப்பகுதியில் முட்டை உற்பத்தி 1,538 மில்லியனாக அமைந்து 25.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு 2017இல் இடம்பெற்ற முட்டையிடும் தாய்க் கோழிகளின் அதிகரித்த இறக்குமதிகளே காரணமாகும். 2018இன் முதலரைப்பகுதியில் கோழி இறைச்சியின் உற்பத்தி 100,040 மெ.தொன்களுக்கு 7.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018இன் முதலரைப்பகுதியில் கோழி இறைச்சி உற்பத்தியின் சராசரிச் செலவு அதிகரித்தமைக்கு ஒரு நாள் கோழிக்குஞ்சுகளின் விலை அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். 2018இன் முதலரைப்பகுதியில் பன்றி இறைச்சி மற்றும் மாட்டிறைச்சி என்பவற்றின் உற்பத்தி முறையே 32.9 சதவீதத்தினாலும் 2.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. விலங்கு வளர்ப்புத் துறையின் முதன்மைத் திட்டத்தின் அடிப்படையில் விலங்கு வளர்ப்பு மற்றும் நலத் திணைக்களம் பாற்பண்ணைத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் மரபு ரீதியான உள்ளார்ந்த வளத்தினை மேம்படுத்தும் பொருட்டு இலங்கையில் விலங்கின் தொகையினை உயர்த்துவதற்கு விலங்கு வளர்ப்பு இனப்பெருக்கச் செயற்றிட்டமொன்று நடைமுறைக்கிடப்பட்டது. பரவக்கூடிய மற்றும் தொற்றக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் கீழ் நோய்களுக்கெதிராக நாடு முழுவதும் விலங்குகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிகள் ஏற்றப்பட்ட வேளையில் நோய்களை ஆய்வு செய்தல் மற்றும் நோய் நிர்ணயங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. விலங்கு வளர்ப்பு மற்றும் நலத் திணைக்களத்தின் விலங்குப் பணிகள் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக விலங்கு வளர்ப்பு வேளாண்மையாளர்களுக்கு நிறுவன ரீதியான மேம்பாடுகளை வழங்கியதன் மூலம் விலங்கு வளர்ப்பு அபிவிருத்திக்கான நிறுவன ரீதியான உதவி வலுவாக்கப்பட்டது.

### கைத்தொழில்கள்

- **2018இன் முதலரைப்பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.5 சதவீதம்**

**கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.6 சதவீதம் கொண்ட மிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்தன.** கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கம் கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு இடையூறாக விளங்கின. அதேவேளை, ஆண்டின் முதலரைப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகள் சாதகமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. எனினும், 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது குறைந்த வேகத்தைக் கொண்டதாகும். அதேநேரம் மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல்களை வழங்கும் நடவடிக்கைகள் ஆண்டின் முதலரைப்பகுதியில் கணிசமாக வளர்ச்சியடைந்த வேளையில், வடிகால்கள், கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் கழிவு அகற்றல் நடவடிக்கைகள் மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் ஓரளவு மெதுவான போக்கினைக் காட்டின.

- **கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவடைதலுக்கு 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் 1.8 சதவீதத்திற்கு சுருக்கமடைந்திருந்தது.** கட்டடவாக்க நடவடிக்கைகளின் பின்னடைவு முக்கியமாகப் பங்களித்திருந்த கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நாட்டின் மொத்த சிமெந்துக் கிடைப்பனவு 0.7 சதவீத சுருக்கத்தினை பதிவுசெய்த வேளையில் கட்டடவாக்க மூலப் பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண் ஆண்டின் முதலரைப்பகுதியில் 3.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2018இன் முதலரைப்பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகளுடன் பெருமளவிற்கு இணைந்துசெல்லும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளும் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 16.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.4 சதவீமான சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. அதேவேளை 2018இன் முதலரைப்பகுதியில் பெறுமதி கூட்டப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.1 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தன. 2018இன் முதலரைப்பகுதியில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 1.1 சதவீதம் கொண்ட சிறிதளவான வளர்ச்சியைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியைப் பிரதிபலித்தது. மேலும், மாதாந்த அடிப்படையில் மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான உற்பத்தி முகாமையாளர் சுட்டெண்ணும் ஆண்டின் முதலரைப் பகுதியில் சராசரியாக தயாரிப்பு நடவடிக்கைகளில் மிதமான வளர்ச்சி வேகத்தினை எடுத்துக்காட்டியது. மொத்தத் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிக்கு 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மந்தமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதலரைப்பகுதியில் பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளாண்மை நடவடிக்கைகளின் மீட்சியினால் நன்மையளிக்கப்பட்ட உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பில் காணப்பட்ட மீட்சி முக்கிய தூண்டுதலாக அமைந்தது. மேலும், 2018இன் முதலரைப்பகுதியில் புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பு 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 4.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், 2018இன் முதலரைப்பகுதியில் கற்கரி மற்றும் சுத்திகரிக்கபட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 13.7 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 22.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. 2018இன் முதலரைப்பகுதியில் மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல் நடவடிக்கைகள் போன்ற ஏனைய கைத்தொழில்கள் தொடர்பான நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்கையில் அது 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 6.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, 2018இன் முதலரைப் பகுதியில் வடிகால், கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் கழிவு அகற்றல் நடவடிக்கைகளும் நீர்சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகளும் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 8.7 சதவீதம் மற்றும் 10.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் முறையே பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 6.4 சதவீதத்தினாலும் 1.9 சதவீதத்தினாலும் மெதுவான வேகத்தில் வளர்ச்சி கண்டன.

2

## உற்பத்திப் போக்குகளும் நிறுவன ரீதியான ஆதரவும்: தயாரிப்பு நடவடிக்கைகள்

### கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்[1]

- **2018இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2017இன் முதலரைப்பகுதியின் அதே வேகத்தில் அமைந்து 1.1 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் மிகப் பாரிய துணைத் துறைகள் உணவு உற்பத்தித் தயாரிப்பு, அணியும் ஆடைகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் மற்றும் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கி சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வேளையில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் மிகச் சிறிய துணைத் துறைகள் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சிகளைப் பதிவுசெய்து ஒட்டுமொத்த வளர்ச்சியை 1.1 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தின. மந்தமடைந்த உள்நாட்டுக் கேள்வியானது உணவு உற்பத்திகளின் தயாரிப்பு, குடிபானம் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருட்கள் போன்ற பெரும்பாலும் உள்நாட்டுச் சந்தைகளுக்கு வழங்குகின்ற துணைத் துறைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியிருக்கின்றன.

- **2018இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் மூன்றிலொரு பங்கிற்கும் மேலாக வகைகூறும் உணவு உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறையானது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 1.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** இத்துறையானது தேயிலை பதனிடல் தவிர்ந்த உள்நாட்டு நுகர்வின் கேள்வியினாலேயே முக்கியமாகத் தூண்டப்பட்டது. எனவே, தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட இம்மிதமான வளர்ச்சிக்கு குறைவடைந்த நுகர்வோர் கேள்வியே பங்களித்திருக்கக்கூடும். ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டிய உணவுத் தயாரிப்பு வகைகளாக கோழி இறைச்சியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், தகரத்திலடைக்கப்பட்ட மீன், பால்மா, பழச்சாறு மற்றும் சோஸ், ஐஸ்கிறீம் மற்றும் அயடின் சேர்க்கப்பட்ட உப்பு என்பன காணப்பட்டன. 2018இன் முதலரைப்பகுதியில் கோதுமை மா தயாரிப்பு, குற்றப்பட்ட அரிசி உற்பத்திகள் என்பன முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

வரைபடம் 2.5

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

- **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் இரண்டாவது மிகப்பெரிய துணைத் துறையான அணியும் ஆடைகள் தயாரிப்பானது 2017இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் 3.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டமானது (ஜிஎஸ்பி+) மீள் நடைமுறைக்கு வந்த போதும் ஆடைத் துறையில் முனைப்பான அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்படவில்லை. இது ஜிஎஸ்பி+ காலப்பகுதியில் ஏனைய பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில்களின் இயலாற்றலைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை பயன்படுத்திக் கொள்ளக்கூடிய தருணமொன்றை காட்டுகின்றது. 2018இன் முதலரைப்பகுதியில் புடவைகளின் தயாரிப்பு 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 1.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

- **ஏனைய உலோகமல்லா உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறை 2017இல் காணப்பட்ட உயர்ந்த உற்பத்தி மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப் பகுதியில் 5.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** இத்துணைத் துறையானது சீமேந்து, புறோசலின் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள், கண்ணாடி உற்பத்திகள், களிமண் கட்டட மூலப்பொருட்கள்,

1 கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் தொகைமதிப்பு மற்றம் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் தொகுக்கப்படுகின்றது. இக்கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் அடியாண்டு 2015 ஆவதுடன் கைத்தொழில்கள் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் திருத்தம் 4 என்பதற்கிணங்க வகைப்படுத்தப்பட்டுள்ளன. கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் இதுவரை பயன்படுத்திய தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணுக்கு பதிலாக உற்பத்திகளின் போக்கினை பகுப்பாய்வு செய்வதற்காக பயன்படுத்தப்படவுள்ளது.

சீமேந்துக் கலவைப் பொருட்கள் மற்றும் சாந்துப்பூச்சு என்பனவற்றின் தயாரிப்பினை உள்ளடக்கியிருக்கிறது. 2018இன் முதலரைப்பகுதியில் புறோசலின் மேசைப்பொருட்கள், கண்ணாடிப் போத்தல்கள், கூரை ஓடுகள் மற்றும் நெழிந்த கூரைத்தகடுகள் என்பனவற்றின் தயாரிப்பு 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. 2018இன் முதலரைப்பகுதியில் சீமேந்து உற்பத்தியும் கூட 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. கட்டடவாக்கத்துடன் தொடர்பான மூலப்பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2018இன் முதலரைப்பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கையில் ஏற்பட்ட மிதமான தன்மை காரணமாக இருக்கக்கூடும்.

- **2018இன் முதலரைப்பகுதியில் கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு 2017இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட 14.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.9 சதவீதத்தினால் மிதமாக வீழ்ச்சியடைந்தது.** தூய்மியானது தற்காலிகமாக மூடப்படுவதற்கு வழிவகுத்த பல்வேறுபட்ட தொழிற்பாட்டு இடையூறுகளின் காரணமாக 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த சபுகஸ்கந்த எண்ணெய்த் தூய்மியின் நடவடிக்கைகள் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் அட்டவணையிடப்பட்ட புத்தாக்கங்களுடன் 2018இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்றன.


- **இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 2.4 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** இப்பெறுபேறானது பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட தாழ்ந்த இறப்பர் விலைகள் மற்றும் இலங்கையில் இறப்பர் உற்பத்திகள் குறைவாகக் காணப்பட்டமை என்பனவற்றின் காரணமாக ஏற்றுமதி சார்ந்த இக்கைத்தொழில் மந்தமடைந்தமையினை எடுத்துக்காட்டுகிறது. 2018இன் முதலரைப்பகுதியில் இறப்பர் டயர்கள், கையுறைகள், தட்டை இறப்பர் வகைகள் மற்றும் கிறேப் இறப்பர் என்பனவற்றின் உற்பத்தி கலப்பான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது.

- **2018இன் முதலரைப்பகுதியில் இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு 2017இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட 15.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** இத்துணைத் துறையானது வளமாக்கி, கிருமிநாசினிகள், தீந்தைகள், வாணிஸ், அச்சிடுகின்ற மை, சவர்க்காரம், அழுக்கு நீக்கிகள், சுகாதார ரீதியான கைதுடைக்கும் துண்டுகள், தீப்பெட்டிகள், வாசனைப்பொருட்கள், ஆரம்ப நிலையிலுள்ள பிளாத்திக்குகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் பொதுவாக உயர்ந்தளவு தளம்பல்களையும் பதிவுசெய்தன. இதற்கு இத்துணைத் துறையில் உள்ளடக்கப்பட்டுள்ள கைத்தொழில்களின் உயர்ந்தளவு வேறுபட்ட தன்மைகள் மற்றும் அவற்றின் கேள்வியினைத் தீர்மானிக்கும் வேறுபட்ட காரணிகள் என்பன காரணங்களாக அமைந்தன. வளமாக்கித் தயாரிப்பு இக்காலப்பகுதியில் பெருமளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, தீந்தைகள், சுகாதார ரீதியான கைதுடைக்கும் துண்டுகள், அழுக்கு நீக்கிகள், பொலித்தீன் சுற்றிகள் என்பனவற்றின் தயாரிப்பு அதிகரித்தது. பின்னைய இரண்டு உற்பத்திகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு நாட்டின் பொலித்தீன் பயன்பாட்டினை மட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதனை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

- **2018இன் முதலரைப்பகுதியில் குடிபானங்களின் தயாரிப்பு 2017இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட 5.1 சதவீதம் கொண்ட குறைப்பிற்கு மாறாக 6.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பியர் மற்றும் சாராய உற்பத்திகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.** மாறாக, புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு, தொடர்ந்து நலிவடைந்த காணப்பட்டதுடன் 2017இன் முதலரைப்பகுதியில் 3.9 சதவீதம் கொண்ட

வரைபடம் 2.6

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு**




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 7.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தமைக்கு சிகரெட் உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது.

- **2018இன் முதலரைப்பகுதியில் அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு என்பன 2017இன் முதலரைப்பகுதியில் முறையே 9.5 சதவீதம் மற்றும் 7.2 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் முறையே 11.4 சதவீதத்தினாலும் 14.6 சதவீதத்தினாலும் அதிகரித்தன.** ஈயம் மற்றும் அலுமினியம் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு அடிப்படை உலோகங்களின் தயாரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்த வேளையில் அலுமினியம் மற்றும் உருக்கு உற்பத்திகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளினது தயாரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது.

- **2018இன் முதலரைப்பகுதியின் உற்பத்தியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த இரண்டு சிறிய துணைத் துறைகளாக தோல் தயாரிப்பும் அதனுடன் தொடர்பான உற்பத்திகளும் காணப்பட்டன.** இவை 3.4 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் தளபாடங்கள் தவிர்ந்த மர உற்பத்திகளின் தயாரிப்பு 13.5 சதவீதத்தினால் அதிகரித்தன. பைகள் மற்றும் மேலங்கிகள் போன்ற தோல் உற்பத்திகள் முன்னைய வகையிலுள்ள உற்பத்திகளின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த வேளையில் பின்னைய வகை வளர்ச்சியடைந்தமைக்கு மரம் அரிவு மற்றும் அதன் திட்டமிடலில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் புகைவண்டிப் பாதைக்குரிய கிடைக்கட்டைகள் மற்றும் ஒட்டுப்பலகை என்பனவற்றின் உற்பத்திகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணங்களாக அமைந்தன.

- **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் ஒவ்வொன்றும் 2 சதவீதத்திற்கும் குறைவான பங்களிப்பினைக் கொண்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலுள்ள மேலும் ஆறு துணைத் துறைகள் உற்பத்தியில் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன.** பெரும்பாலும் அனைத்து இவ்வகைகளினதும் உற்பத்தி அளவுகளில் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன. இவை தாள் மற்றும் தாள் உற்பத்திகளினது தயாரிப்புக்கள் (-17.2 சதவீதம்), அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் தயாரிப்பு (-13.0 சதவீதம்), மின்னியல் சாதனங்களின் தயாரிப்பு (-13.2 சதவீதம்), தளபாடத் தயாரிப்பு (-10.2 சதவீதம்) என்பன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவையாகும். பயிற்சிப் புத்தகங்கள், செய்தித்தாள்கள், நாணயத்தாள்கள், குறிப்பிட்ட வகையான கூட்டுக் குளிசைகள் மற்றும் ஆயுள்வேத பாணி மருந்துகள், வீட்டு உபயோக மின்னியல் சாதனங்கள், கம்பிகள், மெத்தைகள், மரத்தளபாடங்கள், நீர்ப்பம்பிகள் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இச்சாதகமற்ற விளைவுகளுக்கு பங்களித்திருந்தது.

- **வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சும் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சும் கைத்தொழில் வலயங்களின் அபிவிருத்தி, ஒழுங்குவிதிகளின் வடிவமைப்பு மற்றும் முதலீட்டு ஒப்புதல்களை வழங்குதல் என்பனவற்றின் மூலம் கைத்தொழில் துறைக்கு ஆதரவினை வழங்கியிருந்தன.** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் விதந்துரைப்புக்களுக்கேற்ப அரசாங்கம் தயாரிப்புக் கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த பொறிகளின் இறக்குமதி மீதான துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வைகளில் 75 சதவீத தளர்த்தல்களை வழங்குவதற்குத் தீர்மானித்தது. ஊர்திகளின் தயாரிப்பு, கூறுகளைப் பொருத்துதல்-தயாரிப்புக் கைத்தொழில்கள் மற்றும் இத்துறைக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருதல் என்பனவற்றின் பொருட்டு அவற்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சானது நியம தொழிற்பாட்டு நடைமுறைகளைத் தயாரிப்பதன் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள இணங்கியிருந்தது. மேலும், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு வடமாகாணத்திலுள்ள அச்சுவேலி கைத்தொழில் வலயத்தினை விரிவாக்குவதற்கான திட்டங்களுக்கு இப்பிரதேசத்தில் இந்திய முதலீட்டினை எதிர்பார்க்கிறது. அதேவேளை, இலங்கை முதலீட்டுச் சபை 2018 மேயில் தனியொரு முதலீட்டு வசதிப்படுத்தல் செயலணி நிலையத்தின் வெப் நுழைவாயிலொன்றினைத் திறப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது, முதலீட்டு ஒப்புதல்களை வழங்குவதற்கு பயனுடையதாகவிருக்கும். முதலீட்டுச் சபை நான்கு புதிய ஏற்றுமதி வலயங்களை பின்கிறிய மற்றும் மாவத்தகம மிலேனேனியா, சாளிமவுன்ட் எஸ்ரேற் ஆகிய இடங்களில் அபிவிருத்தி செய்வது தொடர்பான வேலைகளை 2018இன் முதலரைப்பகுதியில் தொடங்கியது. 2018இன் நடுப்பகுதியில் ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் ஏறத்தாழ 6,500 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அடையாளம் காணப்பட்டிருப்பதுடன்

இதில் அரைப்பங்கினர் எந்திரத் தொழிற்பாட்டாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். முதலீட்டுச் சபை தேர்ச்சி அபிவிருத்தி செயலணிக் குழுவொன்றினை கைத்தொழில் ஆர்வலர்களுடன் சேர்ந்து ஏற்படுத்தியிருப்பதுடன் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் சமூக அந்தஸ்தினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்காக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுடன் நாடு முழுவதிலும் தொழில்வாய்ப்புச் சந்தைகளை நடாத்துவதற்கும் திட்டமிட்டிருக்கிறது.

- **ஏனைய பல அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் சம்மேளனங்கள், தயாரிப்புத் துறையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் விதத்தில் தமது உபாயங்களைத் தொடர்ந்தும் வழங்கின.** விஞ்ஞானம், தொழில்நுட்ப, ஆராய்ச்சி, தேர்ச்சி அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டிப் பாரம்பரிய அமைச்சு அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சிக் கொள்கை, மரபு தொகுதி நிலையங்கள் மீதான தேசிய கொள்கை மற்றும் தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலுக்கு உதவியளிக்கும் விதத்தில் தேசிய மரபு தரவுகளை களஞ்சியப்படுத்துவதற்காக நடவடிக்கைத் திட்டமொன்றினை உருவாக்கியது. மேலும், அமைச்சானது நாட்டின் தொழில் பயிற்சியை மேம்படுத்துவதற்காக திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவில் பல்கலைக்கழக கல்லூரியொன்றினை நிறுவுவதற்கு காணியினைக் கொள்வனவு செய்திருக்கிறது. கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவகம் இலங்கைத் தொழில்முயற்சியாளர்களினால் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கான தொழில்நுட்பவியல் மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. அதேவேளை, தேசிய விஞ்ஞான மன்றம் பல புலமைப்பரிசில்களை வழங்கியதுடன் புதிய உற்பத்தி அபிவிருத்தி முன்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளுக்கு ஆராய்ச்சிக் கொடைகளை வழங்கியதுடன் முக்கியமாக ஆராய்ச்சிகள் விடயங்கள் பற்றியும் ஆராய்ந்த வருகிறது. அதேவேளை, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு நாட்டில் பெண்களின் தொழில்முயற்சியாண்மைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் முயற்சிகளை விரிவாக்கியது. பெண்கள் தொழிற்படை பங்கேற்பு வீதத்தினை அதிகரிக்கும் நோக்குடன் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு நாடு முழுவதிலும் 2,000 பிள்ளைகள் நலக் காப்பு மையங்களை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது. இலங்கையில் நிறுவப்பட்டுள்ள கைத்தொழில் சம்மேளனங்கள் மற்றும் சங்கங்கள் தயாரிப்புத் துறைக்கு ஆதரவளிக்கும் விதத்திலும் கொள்கை வடிவமைப்பில் அரச துறைக்கு உதவும் விதத்திலும் பல்வேறு முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தியது. பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தியினைக் கூட்டாக மேற்கொள்வதற்கும் ஏற்றுமதியின் உள்ளார்ந்த வளத்தினை மேம்படுத்துவதற்குமாக இறப்பர் உற்பத்தித் தயாரிப்புக் கம்பனிகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசனையாளர்கள் ஆகியோரை ஒன்றுசேர்க்கும் நோக்குடன் 2018 சனவரியில் சிறப்பு நோக்கங்களுக்காக "லங்கா இறப்பர் குளோபல் கொன்சோட்டியம்" என்ற பெயரில் நிறுவனமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை வர்த்தக சம்மேளனம், வர்த்தகச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிறுவனத்தின் பங்குடமையுடன் நீதிமன்றத்திற்கு வெளியே வர்த்தகப் பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்கு வசதியளிப்பதற்காக "இலங்கை வர்த்தக சம்மேளனம் - வர்த்தகச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்கான நிறுவன மாற்று பிணக்குத் தீர்மான நிலையம்" ஆரம்பிக்கப்பட்டது.

### பணிகள்

- **2018இன் முதலரைப் பகுதியில் பொருளாதாரத்தின் மிகப்பெரும் பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணி நடவடிக்கைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இவ்வளர்ச்சிக்கு முக்கியமாக நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கம் ஆதரவளித்தன. மேலும், உண்மைச் சொத்து, போக்குவரத்து, தங்குமிடவசதி, காப்புறுதி, தொலைத்தொடர்பூட்டல், தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், மனித நல நடவடிக்கைகள் மற்றும் கல்விப் பணிகள் என்பன பணிகள் நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு சாதகமான விதத்தில் பங்களித்தன. எனினும், ஆண்டின் முதலரைப் பகுதியில் பொது நிர்வாகம் மற்றும் நிகழ்ச்சித் திட்டப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் சுருக்கமடைந்தன. மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் பணி நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்று பிரதிபலிக்கப்பட்டது. இது சராசரியாக 2018இன் முதலரைப் பகுதியில் முன்னேற்றமொன்றினைப் பிரதிபலித்தது.

2

### மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடவசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

- **2018இன் முதலரைப் பகுதியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடவசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** 2018இன் முதலரைப் பகுதியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சி 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து இப்பிரிவின் வளர்ச்சிக்குப் பெருமளவிற்கு பங்களித்தது. அதேநேரம், 2018இன் முதலரைப்பகுதியில் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.8 சதவீதத்தினால் அதிகரித்தது. வேளாண்மை உற்பத்திகளின் மீட்சியிலிருந்து கசிந்த சாதகமான தாக்கங்கள் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்துப் பணிகளின் விரிவாக்கத்தில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியிருக்கக்கூடும். மேலும், 2018இன் முதலரைப் பகுதியில் தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபானப் பணிகளின் நடவடிக்கைகள் 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.0 சதவீதம் கொண்ட சாதகமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்த வேளையில், அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றன.

### தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள்

- **2018இன் முதலரைப் பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.8 சதவீதத்தினால் விரிவடைந்தன.** இவ்வளர்ச்சிக்கு, 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 10.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப் பகுதியில் 12.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த தொலைத் தொடர்பூட்டல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே பெருமளவிற்கு காரணமாகவிருந்தது. மேலும், 2018இன் முதலரைப்பகுதியில் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டமிடல் ஆலோசனைகள் மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளும் 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.7 சதவீதத்தினால் விரிவடைந்தன. எனினும், இக்காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒலிபரப்பு மற்றும் கட்புல செவிப்புல தயாரிப்பு நடவடிக்கைகள் 2017இன் முதலரைப்பகுதியின் 22.1 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 16.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.

### நிதியியல், காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

- **2018இன் முதலரைப் பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் நிதியியல், காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் வதிவிட சொத்துடைமை உட்பட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.5 சதவீதத்தினால் விரிவடைந்தது.** நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகளில் காணப்பட்ட வளர்ச்சி உத்வேகம் இப்பிரிவின் விரிவாக்கத்திற்கு தூண்டுதலை வழங்கியது. இதன்படி, 2018இன் முதலரைப் பகுதியில் நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 10.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தன. அதேநேரம், வதிவிட சொத்துடைமையினை உள்ளக்கிய உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2017இன் முதலரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மேலும், 2018இன் முதலரைப் பகுதியில் காப்புறுதி, மீள்காப்புறுதி, ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீதத்தினால் அதிகரித்து இப்பிரிவின் அபிவிருத்திக்குப் பங்களித்தன.

### தொழில்சார் நிபுணத்துவ பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள்

- **பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில், 2018இன் முதலரைப் பகுதியில் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் முன்னைய**

**ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இவ்வளர்ச்சிக்கு, 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப் பகுதியில் 5.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளில் காணப்பட்ட மேல்நோக்கிய அதிகரிப்பே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. மேலும், தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் 2017இன் முதலரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 3.0 சதவீதத்தினால் விரிவடைந்து இப்பிரிவிற்கு சாதகமான பங்களிப்பொன்றினை வழங்கின.


### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிகள் நடவடிக்கைகள்

- **2018இன் முதலரைப் பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இதே சதவீத வளர்ச்சியினால் சிறிதளவால் அதிகரித்தது.** இம்மிதமான தன்மைக்கு 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.7 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப் பகுதியில் 0.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பணிகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கமே பெருமளவிற்கு காரணமாக அமைந்தது. அதேவேளை, மனிதநல நடவடிக்கைகள் மற்றும் கல்விப் பணிகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 11.9 சதவீதம் 3.6 சதவீதம் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் மேலும் மெதுவடைந்து 2.2 சதவீதத்தினாலும் 1.7 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

### செலவினம்

- **2018இன் முதலரைப்பகுதியில் பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டு செலவினத்தின் கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டுச் செலவினம் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சந்தை விலைகளில் 9.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு, முதலீட்டுச் செலவினத்தில் மெதுவான தன்மை காணப்பட்டமைக்கிடையிலும் நுகர்வுச் செலவினத்தில் அவதானிக்கப்பட்ட விரிவாக்கமே பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. இதன்படி, 2018இன் முதலரைப்பகுதியில் நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வுச் செலவினம் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.0 சதவீத

வரைபடம் 2.7
பொருளாதாரத்தின் மொத்த செலவினம்
(மொ.உ.உ.இன் சதவீதமாக)




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீட்டுச் செலவினத்தின் வளர்ச்சி 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 23.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 3.2 சதவீதத்திற்கு மிதமடைந்தது. முதலீட்டு நடவடிக்கைகளில் காணப்பட்ட இம்மெதுவான தன்மை இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட கட்டடவாக்க நடவடிக்கைகளின் பின்னடைவிலும் பிரதிபலிக்கப்பட்டது. அதேநேரம், 2018இன் முதலரைப்பகுதியில் நடைமுறைச் சந்தை விலைகளில், தேறிய வெளிநாட்டுக் கேள்வி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 17.1 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 24.1 சதவீதத்தினால் மேலும் சுருக்கமடைந்தது. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், இக்காலப்பகுதியில் 11.8 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இருப்பினும், 2017இன் இதே காலப்பகுதியின் 13.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகள் 15.0 சதவீதத்தினால உயர்வடைந்தமையானது தேறிய வெளிநாட்டுக் கேள்வியை குறைவடையச் செய்தது. இதனைத் தொடர்ந்து, 2018இன் முதலரைப்பகுதியில் மொத்த உள்நாட்டுச் செலவினம் மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி என்பனவற்றின் கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடைமுறைச் சந்தை விலைகளில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.0 சதவீதம் கொண்டவளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

2

- **2018இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 11.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.15,602.3 பில்லியனாக 9.3 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்படுகிறது.** மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் எதிர்பார்க்கப்படும் இவ்விரிவாக்கத்திற்கு முதலீட்டுச் செலவினத்தில் எதிர்பார்க்கப்படும் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் நுகர்வுச் செலவினத்தில் ஏற்படும் வளர்ச்சி பெருமளவிற்கு உதவியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, 2018இல், தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 9.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 17.9 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, 2018இன் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 11.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.7 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

### நுகர்வு

- **பொருளாதாரத்தில் மிகப் பாரிய செலவின வகையாக விளங்கும் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2018இல் ரூ.10,898.4 பில்லியனாக விளங்கி 2017இல் பதிவு செய்யப்பட்ட 9.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 16.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்படுகிறது.** தனியார் மற்றும் அரச நுகர்வுச் செலவினம் ஆகிய இரண்டும் மொத்த நுகர்வுச் செலவினத்தின் விரிவாக்கத்திற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, 2018இல் நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினம் 2017இன் 8.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 16.3 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. 2018இன் முதலரைப்பகுதியில் அரச நுகர்வுச் செலவினத்தின் நடத்தையினையும் எஞ்சிய ஆண்டுப்பகுதிக்கான எறிவுகளையும் பரிசீலனையில் கொள்ளும் பொழுது, பொது நுகர்வுச் செலவினம் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் மேலும் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.


### முதலீடு

- **2018இல் முதலீட்டுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 17.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எறிவு செய்யப்பட்டது.** ஆண்டின் முதலரைப்பகுதியில் மற்றும் எறிவுகளில் அரச செலவினம் மற்றும் எதிர்கால செயலாற்றத்தினைப் பரிசீலனையில் கொள்ளும் போது பொது முதலீட்டுச் செலவினத்தில் மிதமான தன்மையொன்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2018 யூன் இறுதியில் கொள்வனவு/ கட்டடவாக்கம்/ திருத்த வேலைகள் என்பன உட்பட தனியாள் வீடமைப்பு நோக்கங்களுக்காக தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2017 யூன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 22.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.6 சதவீதத்தினால் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்து, ஒட்டுமொத்த முதலீடுகளில் முக்கிய கூறாக விளங்கும் கட்டடவாக்கத்துடன் தொடர்பான தனியார் முதலீடுகள் மிதமடைந்தமையினை எடுத்துக்காட்டின. அளவுச்சுட்டிகளில் குறிப்பிடப்பட்டவாறு இறக்குமதி முதலீட்டுப்பொருட்களைப் பொறுத்தவரையில் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதிகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.3 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 3.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. அதேவேளை, ஆண்டின் முதலரைப்பகுதியில் பொறி மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் ஏனைய முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் கணிசமான சுருக்கத்தைப் பதிவுசெய்தன. இவ்வபிவிருத்திகள் மற்றும் வியாபார அளவீடுகளில் எடுத்துக்காட்டப்பட்டவாறான வியாபார மனோபாவம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்கையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீட்டுச் செலவினம் 2017ஆம் ஆண்டின் 36.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 32.5 சதவீதத்திற்குக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2018இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2017இன் தொடர்பான காலப்பகுதிக்குரிய ஐ.அ.டொலர் 601.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,622.9**

வரைபடம் 2.8

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு மற்றும் சேமிப்புக்கள் (அ)**




(அ) தரவுகள் 2010 அடிப்படை ஆண்டிற்கான மொ.உ.உ. மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) இலங்கை மத்திய வங்கியின் நடுத்தரகால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பின் அடிப்படையிலான மதிப்பீடுகள்.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**மில்லியனுக்கு[2] 169.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.** உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,344.8 மில்லியனுக்கு 386.2 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், 2018இன் முதலரைப்பகுதியில் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் உட்கட்டமைப்பு, தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் முறையே 82.9 சதவீதத்திற்கும் 7.7 சதவீதத்திற்கும் 9.4 சதவீதத்திற்கும் வகைகூறின.

## சேமிப்புக்கள்

- **பொருளாதாரத்தின் சேமிப்புக்களைப் பரிசீலனையில் கொள்கையில் 2018இல் உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** இதன்படி, 2018இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2017இன் மொ.உ.உற்பத்தியின் 29.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 24.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டது. அதேவேளை, ரூபா நியதிகளில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய ஆரம்ப வருமானம் மெதுவான வேகத்தில் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்து தேறிய நடைமுறை மாற்றல்கள் 2017 உடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, தேசிய சேமிப்புக்கள் 2017இன் 34.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் மொ.உ.உற்பத்தியின் 29.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டது.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **மத்திய வங்கியின் நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பின் கீழ் எறிவு செய்யப்பட்டவாறு, பொருளாதாரம் 2019இல் 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** அனைத்து பிரதான பொருளாதார நடவடிக்கைகளும், அதாவது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் என்பன ஒட்டுமொத்தப் பொருளாதர வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன. வெளிநாட்டுப்பக்கத்தில் பொருளாதாரம் முன்னுரிமை வழங்கப்பட்ட வர்த்தக ஒழுங்குகளிலிருந்து நன்மைகளைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் வியாபாரச் சூழலை மேம்படுத்தும் விதத்தில் கொள்கைப்பக்கத்திலிருந்து சாதகமான அபிவிருத்திகள் எதிர்பார்க்கப்படுகின்றமையானது உள்நாட்டு முதலீடுகளையும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் ஊக்குவிக்கும். மேலும், வெளிநாட்டுப்பக்கத்தின் அபிவிருத்திகளிலிருந்து உள்ளார்ந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வெளிநாட்டுக் கேள்வியில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு பொருளாதாரத்தின் வர்த்தகப்படுத்தத்தக்க துறையினை மேம்படுத்தும் விதத்தில் ஏற்றுமதிப்பட்டியலை பன்முகப்படுத்துவது அவசியமாகும்.

- **2019இல் பெரும்பாலான வேளாண்மைப் பயிர்கள் வளர்ச்சியைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.** கடுமையான வானிலை நிலைமைகள் இடையூறுகளை ஏற்படுத்தினாலன்றி 2019இல் நெல் அறுவடை நியாயமானதொன்றாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக தேயிலை வளரும் பிரதேசங்களில் ஊகிக்கப்பட முடியாத வானிலை நிலைமைகள் உயர்வடைந்து செல்லும் உற்பத்திச் செலவு, முக்கிய ஏற்றுமதி நாடுகள் மீதான சாத்தியமான தடைகள் மற்றும் உள்நாட்டுப் பெருந்தோட்டத் துறையில் சம்பளப் போரங்களுக்கான சாத்தியங்கள் போன்ற சவால்களுக்கும் மத்தியிலும் 2019இல் தேயிலைக் கைத்தொழில் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, இறப்பர் கைத்தொழிலில் காணப்படும் குறைக்கப்பட்ட விலை மட்டங்கள், உள்ளூர் இறப்பர் உற்பத்தியை மோசமாகப் பாதிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், மீள்பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல் என்பனவற்றிற்காக வழங்கப்படும் உதவுதொகைகளை அதிகரிப்பதன் மூலம் உள்ளூர் இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்புக்கள் மற்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கு இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்குதல் என்பன உயர்வடைந்த பன்னாட்டு எண்ணெய் விலைகளுடன் சேர்ந்து உயர்ந்த உற்பத்திக்கு ஆதரவளிக்கக்கூடும். 2019இல் தெங்கு உற்பத்தி 2018இன் நடுப்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட போக்குகளின் தொடர்ச்சியாக வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தெங்கினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியும் தெங்கு உற்பத்தியின் வளர்ச்சிக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, மீன்பிடி மூலவளங்களின் முன்மதியுடைய முகாமைத்துவம் சட்டத்திற்கு மாறான மீன்பிடி நடவடிக்கைகளுடன் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துமெனவும் நவீனத் தொழில்நுட்பங்களை பின்பற்றுவது மீன்பிடிக் கைத்தொழில் 2019இன் ஆண்டுப்பகுதியில் உற்பத்தியை விரிவாக்குவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. விலங்கு வளர்ப்புத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட வழிமுறைகள் 2019இல் உயர்ந்த உற்பத்தி மட்டங்களைத்

2 வருவாய்களுடன் தொடர்புடைய வெளிநாட்டு நேரடி முதலீட்டு இலக்கமானது முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுடன் தொடர்புடைய கடன்களை உள்ளடக்கியதுடன் இது பிந்திய அத்தியாயம் 5 இல் தரப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதுடன், இதற்கு முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்படாத கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை உள்ளடக்கியமை பிரதான காரணமாகும்.

2

தொடர்ந்தும் பேணுவதற்கு பாற்பண்ணை மற்றும் கோழி வளர்ப்பு கைத்தொழில்களை இயலுமைப்படுத்தும். உள்நாட்டு பாற்பண்ணை உற்பத்தி 2019இல் உள்ளூர் தேவைகளில் ஏறத்தாழ 40 சதவீதத்தினைப் பூர்த்திசெய்யப் போதுமானதாகவிருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் உற்பத்தியானது உயர்ந்த வளர்ச்சியைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, 2017 மற்றும் 2018 காலப்பகுதியில் முட்டையிடும் தாய்க்கோழிகள் மற்றும் இறைச்சிக்கான தாய்க்கோழிகளின் அதிகரித்த இறக்குமதிகளே காரணமாகும். முன்னோக்கிப் பார்க்கையில், இத்துறையின் அபிவிருத்தி வேளாண்மை மூலவளங்களின் சிறந்த முகாமைத்துவம் அதிகரிக்கின்ற பொறிமுறை, மேம்பட்டுவரும் உற்பத்திகளின் தரம் மற்றும் உலகளாவிய சந்தை வசதிகளினை நாடக்கூடிய தன்மை, காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய உறுதியான வேளாண்மை நடைமுறைகளை வலியுறுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தக ரீதியில் ஆற்றல் வாய்ந்த வேளாண்மை நடவடிக்கைகளை பின்பற்றுவதிலேயே தங்கியிருக்கும்.

- **கைத்தொழில் நடவடிக்கைகள் 2019இல் ஆரோக்கியமான வேகத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** அண்மைய ஆண்டுகளில் தொடர்ந்தும் சாதகமான நிலையில் காணப்பட்ட வளர்ச்சி, அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வி, சந்தை அடைவதற்கான அதிகரித்த அணுகுமுறைகள், உள்நாட்டுக் கேள்வியின் மீட்சி என்பனவற்றின் காரணமாக 2019இல் படிப்படியாக மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உணவு, பெற்றோலியம் மற்றும் இறப்பர் உற்பத்திகளில் ஏற்பட்ட விரிவாக்கம் கேள்வியைப் பூர்த்திசெய்வதற்கான மேம்பட்ட இயலாற்றல் என்பனவற்றுடன் சேர்ந்தமையின் காரணமாக 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ஆடைத் துறை ஜிஎஸ்பி+ சலுகைகளிலிருந்து கூடுதலான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தற்போதைய குறைந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினை அடைவதற்கு உயர்ந்த பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்தி இயலாற்றலை அதிகரிக்கக்கூடிய உயர்ந்த முதலீடுகளை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்ட முன்னெடுப்புக்களை மேற்கொள்வது அவசியமானதாக இருக்கும். மேலும், இவ்வதிகரித்த உற்பத்திகள் இத்துறையின் வளர்ச்சியை வலுப்படுத்தும் பொருட்டு மேம்பட்ட பன்னாட்டு வர்த்தக இணைப்புக்களினூடாக வெளிநாட்டுச் சந்தைகளை இலக்கிட்டனவாக இருத்தல் வேண்டும். மேலும், தயாரிப்புத் துறையின் எதிர்கால முன்னேற்றமானது தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை, மூலவளங்களின் தரம் அதேபோன்ற வலுவின் உயர்ந்த செலவு போன்ற பிரச்சனைகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதன் மீது தங்கியிருக்கும். எனவே, நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல், பாடசாலையை விட்டு விலகுவோரை இலக்காகக் கொண்ட பிரச்சாரங்களினூடாக தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களைக் கவர்ந்து கொள்ளும் விதத்தில் முயற்சிகளை மேற்கொள்ளுதல், ஊழியர்களாக வரக்கூடியவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குதல் உட்பட ஏற்கனவேயுள்ள தொழிலாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளுதல் என்பனவற்றினூடாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுடன் பின்னூட்டல் இணைப்புக்களை மேம்படுத்திக் கொள்ளுதல் என்பன தயாரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக்கூடிய அம்சங்களாக விளங்குகின்றன. அதேவேளை கட்டுமான நடவடிக்கைகள் கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயங்கள், பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தின் புதிய முனைக்கோடி, மேற்கு பிராந்திய பொருளாதார முதன்மைத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள், தெற்கு விரைவுப்பாதை மற்றும் வெளிச்சுற்று விரைவுப்பாதை என்பவற்றின் விரிவாக்கம் போன்ற அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமான செயற்றிட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று இடம்பெறுமெனவும் பொருளாதார வளர்ச்சிக்கான அவற்றின் பங்களிப்பினை அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் வதிவிட மற்றும் வர்த்தக கட்டுமான செயற்றிட்டங்கள் போன்ற தனியார் செயற்றிட்டங்கள் என்பனவும் கட்டுமான நடவடிக்கைகளின் வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கு பங்களிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் கட்டுமான நடவடிக்கைகளின் வளர்ச்சியினால் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளும் நன்மையடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பணிகள் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டுப்பகுதியின் வளர்ச்சிக்கு தூண்டுதலாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சி மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து, நிதியியல் பணிகள், ஏனைய தனியாள் பணிகள், தங்குமிட வசதி, கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பணிகள் போன்ற அனைத்து முக்கிய பணி வகைகளினது ஆதரவுடன் பரந்த அடிப்படையொன்றினைக் கொண்டிருக்குமென எறிவு செய்யப்படுகிறது. முன்னணி மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களுடன் இலங்கை பேணி வரும் உற்சாகமளிக்கும் உறவு முறைகளும் முன்னுரிமையளிக்கப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகளினூடாக முன்னேற்றம் கண்ட வர்த்தகத் தொடர்புகளும் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது இறுதியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்திற்கு உத்வேகமளிக்கும். அதேவேளை, மின்னியல் மற்றும் கலப்பு வலுப் பேருந்துகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொதுப் போக்குவரத்து முறைமையினை விரிவடையச் செய்வதற்கான தற்போதைய முன்மொழிவுகளைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தல், உயர்தரப் போக்குவரத்துப்

பணிகளை வழங்கி கூடுதலான பயணிகள் பொதுப் போக்குவரத்துப் பணிகளைப் பயன்படுத்த ஊக்குவிக்குமென்பதால் பொருளாதாரத்திற்கான மேலதிகப் பெறுமதிகள் சேர்க்கப்படும். மேலும், பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்திநிலையத்தின் பயணிகள் கையாளலின் இயலளவு விரிவடைதல் மற்றும் உள்நாட்டு வானூர்தி வலையமைப்பு புனரமைப்பு வேலைகள் திட்டமிடப்பட்டவாறு நடைமுறைக்கு வருமிடத்து, இது போக்குவரத்து நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கும் அதேபோன்று சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கும் மேலும் ஆதரவளிக்கும். மேலும், முக்கிய சந்தைகளை இலக்காகக் கொண்டு உலகளாவிய ரீதியில் சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கான பிரச்சாரங்களை மேற்கொள்வது எதிர்காலத்தில் இலங்கைக்கு உயர் செலவிடலினைக் கொண்ட சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து அதன் மூலம் சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகள் வளர்ச்சியடைவதற்கு ஆதரவளிக்கும். அதேவேளை, மேம்பட்ட பொருளாதார நடவடிக்கைகள், நிதியியல் பணிகளின் வளர்ச்சி உத்வேகத்தைப் பேணும். மேலும், பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் நடுத்தர வருமானப் பிரிவினரின் நவீனத்துவமான வாழ்க்கை முறை உயர்தர தனியாள் பணிகளுக்கான கேள்வியை உத்வேகப்படுத்துவதன் மூலம் ஏனைய தனியாள் பணிகளின் விரிவாக்கத்திற்கும் இது பங்களிக்கும். எனினும், இவ்வபிவிருத்திகளிலிருந்து விரும்பத்தக்க நன்மைகளை எய்தும் பொருட்டு அரச செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான வினைத் திறன்மிக்கப் பொறிமுறையொன்றுடன் இவ்வபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதில் அதிகளவு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

- **உயர்ந்த தனியார் முதலீடுகளின் ஆதரவுடன் 2019இல் முதலீட்டு நடவடிக்கைகள் சாதகமான முறையில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கான திடமான கொள்கை வழிமுறைகளுடன் சேர்த்து அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் புதிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுடன் இணைந்த தனியார் முதலீட்டு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான கூட்டுறுதி தொடர்மாடிகளும் வர்த்தக ரீதியான கட்டடச் செயற்றிட்டங்களும் தனியார் முதலீடுகளின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும்.

- **தேசிய சேமிப்புக்களை மேம்படுத்துவதும் வலுவானதொரு மட்டத்தில் இவற்றைப் பேணுவதும் இலங்கையை உயர்ந்ததொரு வளர்ச்சிப் பாதையில் நிலைப்படுத்துவதற்கு இன்றியமையாததாக இருக்கிறது.** இதனைப் பொறுத்தவரை, முன்மதியுடைய செலவின சிக்கனப்படுத்தல் மற்றும் அரசிறை அதிகரிப்புத் திட்டங்கள் ஆகிய வழிமுறைகளினூடாக நடுத்தர கால இறை இலக்குகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அரச சேமிப்புக்கள் வலுவான மட்டமொன்றில் அடைந்து அதனைப் பேணுகின்ற அதேவேளையில் பணவனுப்பல்களை ஊக்குவிப்பது பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த சேமிப்புக்களை மேம்படுத்துவதற்கு முக்கியமானதாகவிருக்கின்றது. இது உயர்ந்த முதலீட்டுச் செலவினத்திற்கான கேள்விக்கு மத்தியில் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை முகாமைப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

2